# திருமங்கலம் மெட்ரோ ரெயில் நிலையத்தில் இலவச மருத்துவ முகாம்

## 250 பேர் பயன் பெற்றனர்

சென்னை, மார்ச்.17-
சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் 'ஸ்ரீ சத்ய சாய் சேவா' அமைப்புடன் இணைந்து மெட்ரோ ரெயில் பயணிகள் மற்றும் பொதுமக்களின் நலனுக்காக இலவச பொது சுகாதார மருத்துவ முகாமை திருமங்கலம் மெட்ரோ ரெயில் நிலையத்தில் நடத்தியது. ரத்தத்தின் வகை கண்டறிதல், ரத்த அழுத்த சோதனை உள்ளிட்ட பல்வேறு பரிசோதனைகள் செய்யப்பட்டது. மெட்ரோ பயணிகள், பொதுமக்கள் மற்றும் மெட்ரோ ரெயில் ஊழியர்கள் என சுமார் 250 பேர் இந்த முகாமில் பங்கேற்று பயன் அடைந்தனர்.

இதேபோல அக்ரம் அறக்கட்டளையுடன் இணைந்து சென்டிரல் ரெயில் நிலையத்தில் பிளாஸ்டிக் தவிர்ப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியும், பரங்கிமலை மெட்ரோ ரெயில் நிலையத்தில் 'ஆன் திஸ்டீரிட் ஆப் சென்னை' என்ற கலைக்குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது.